*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **30 ஏப்ரல், 2021**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவனை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மெத்தனமாக செயல்படுவதாக அன்மையில் சில நாளிதழ்களில் செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இன்று(30-04-2021), ஜிப்மர் மருத்துவமனையைப் பார்வையிட்டு மருத்துவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளோடு கலந்துரையாடினார். அப்போது கொரோனா சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை, பிராணவாயு இருப்பு, பிராணவாயு படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆகியவை பற்றி கேட்டறிந்தார்.

ஜிப்மர் மருத்துவமனையில் உள்ள மருத்துவ வசதிகளை விரிவாக எடுத்துரைத்த இயக்குநர் டாக்டர் ராகேஷ் அகர்வால், மருத்துவமனையில் 11 கிலே லிட்டர் பிராணவாயு கொள்கலன் நிறுவப்பட்டு இருப்பதாகவும் அதனை 20 கிலே லிட்டர் கொள்ள்ளவு கொண்டதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும தெரிவித்தார்.

- மத்திய அரசு மற்றும் தனியார் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ் மருத்துவ அதிகாரிகள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த முயச்சி செய்ய வேண்டும். மருத்துவக் கருவிகளின் அதிகப்படுத்த வேண்டும்.
- மருத்துவப் பணியில் உள்ள அனைவருக்கும் முறையான பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- தீவிர சிகிச்சை மற்றும் பிராணவாயு படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டம் வகுக்க வேண்டும்.
- தொலைத் தொடர்பு மருத்துவ ஆலோசனை வசதிகளை விரிவுபடுத்தி நேரில் வந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியாத நோயாளிகளுக்கும், மக்களுக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

உள்ளிட்ட ஆலோசனைகளை துணைநிலை ஆளுநர் வழங்கினார். துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் டாக்டர் C. சந்திரமௌலி, டாக்டர் A. P மகேஸ்வரி சுகாதாரத்துறைச் செயலர் திரு அருண், சுகாதாரத்துறை இயக்குநர் திரு மோகன் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

பத்திரிகையாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- தற்போதைய கொரோனா சூழலில் அயராது பாடுபடும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களை நான் பாராட்டுகிறேன். ஜிப்மர் மருத்துவமனை மக்களுக்கு சிறப்பான சேவைகை வழங்கி வருகிறது. ஆனால் அது இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

- பிராணவாயு மற்றும் தீவிர சிகிச்சை படுக்கைகளை அதிகப்படுத்தவும், மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். அதேபோல அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் சவால்கள் பற்றியும் கூறியிருக்கிறார்கள். இது தொடர்பாக அறிக்கை தருவதாகவும் சொல்லியிருகிறார்கள்.
- கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அனைவருக்கும் ரெம்டெசிவிர் மருந்து தேவைப்படாது. ஆபத்தான சூழ்நிலையில் உள்ள நோயாளிகளுக்கு மட்டுமே தேவைப்படுகிறது. ரெம்டெசிவிர் மருந்துக்காக மக்களை அலைக்கழிக்க வேண்டாம். மருத்துவர்களுக்கும், பொதுமக்களும் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தின் அறிவுரையை ஏற்று செயல்பட வேண்டும்.
- புதுச்சேரியில், ரெம்டெசிவிர் மருந்திற்காக யாரும் அலைய தேவையில்லை. தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களுக்கும் அரசு மூலமாக மருத்து வழங்கப்படுகிறது. தேவையில்லாமல் ரெம்டெசிவிர் மருந்தை பரிந்துரை செய்பவர்களைக் கண்காணித்து மருத்துவத்துறையின் மூலம் நடவடிக்கைகள் எடுக்க நேரிடும்.
- கொரோனா நோய்க்கு சிகிச்சை அளிக்க அனுமதி பெற்ற மருத்துவமனைகள் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை மருத்துவமனையின் மூலமே ஏற்பாடு செய்து சிகிச்சை அளிக்க வேண்டும். சிகிச்சை பெற வருபவர்களிடம் மருந்தை வாங்கிவரச் சொல்லி அலைக்கழிக்க் கூடாது. மேலும் அரசு மூலமாக வழங்கப்படும் ரெம்டெசிவிர் மருந்து சரியான நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறதா, பயன்படுத்தப்படுகிறதா என்பதை மருத்துவத் தணிக்கை குழு மூலம் கண்காணிக்கப்படும்.
- பொதுமக்கள் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும். பேருந்துகளில் மக்கள் கூட்டமாக செல்வதைத் தவிரக்கவும். காவல் துறையினர் மூலம் இது கண்காணிக்கப்படம்.

என்று தெரிவித்தார். முன்னதாக, ஜிப்மர் மருத்துவமனையின் இயக்குநர் துணைநிலை ஆளுநரை வரவேற்றார்.